## <u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.</u>
## <u>C.C.No.86/2022</u>

2023ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் நாள் வெள்ளிக்கிழமை அரசு தரப்பு சாட்சி–2 கனிமொழி என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.ஜெ.லதா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கனிமொழி | வயது | : |
| த.பெ/ க.பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | சமயம் | : |
| வட்டம் | : | சாதி | : |
| மாவட்டம் | : | | |

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் வடவீக்கத்தில் வசித்து வருகிறேன். நான் வீட்டுக்குடித்தனமாக இருந்து வருகிறேன். அ.சா.1 என் கணவர். ஆஜர் எதிரியை தெரியும். எங்கள் ஊர்காரர்கள். 20.08.2021 அன்று மதியம் 3.30 மணியளவில் நான், என் மாமனார், என் மகள் ஆகியோர் வீட்டிலிருந்தபோது ஆஜர் எதிரி போதையில் பயங்கரமாக சத்தம் போட்டுக் கொண்டு தேவடியா மகளே, குச்சிகாரி மகளே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பிரச்சனை இருந்து, நாங்கள் ஒருலட்சம் ரூபாய் தரவேண்டியிருந்தது. அதற்கு வட்டி கொடுத்தோம். ஆஜர் எதிரியை ஏன் இப்படி வீட்டிற்குள் வந்து தகராறு செய்கிறாய் என்று என் மாமனார் ஜாய்ஸ் கேட்டதற்கு எதிரி என் மாமனாரை நெஞ்சில் கை வைத்து தள்ளினார். நான் என் மாமனாரை கைதாங்கலாக பிடித்து சேரில் உட்கார வைத்தேன். ஆஜர் எதிரி பணம் கொடுக்கவில்லை என்றால் வீட்டில் படுத்துவிடுவேன், உங்களை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார். நான் இது சம்மந்தமாக என் கணவருக்கு போன் செய்து விபரத்தை சொன்னேன். அதன் பிறகு புகார் கொடுத்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –</u>**

போலீசார் நாங்கள் புகார் கொடுத்த உடனே வீட்டில் வந்து விசாரித்தார்கள். என் கணவர்தான் புகார் கொடுத்தார். என்னை ஒருமுறை போலீசார் விசாரித்தார்கள். நாங்கள் தரவேண்டிய பணத்திற்கு வட்டி கொடுத்துவிட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரிக்கு மது அருந்தும் பழக்கமில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டவுமில்லை, என் மாமனாரை தள்ளிவிடவில்லை

என்றால் சரியல்ல. எதிரி அவருக்கு சேர வேண்டிய பணத்தை கேட்டார் என்றாலும், அவருடைய பணத்தை ஏமாற்றுவதற்காக எங்கள் குடும்பத்துடன் சேர்ந்து, எங்கள் நிலத்தை அவர் வாங்கவில்லை என்பதால் திட்டமிட்டு அவர் மீது என் கணவர் பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/.ஆர்.இராஜசேகரன், எல்,எல்,எம்.,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1,
ஜெயங்கொண்டம்.